JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

S.T.C.152/2018

**Complainant Duraisamy and Accused Nataraja Moorthi present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the **04.09.2024**

**D.W.1 Name: Aravind S/o.Palanisamy**

**எ.சா.1 அரவிந்த் அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் தற்போது திருச்செங்கோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மேற்பார்வையாளராக 31.03.2022 ம் தேதியில் இருந்து வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பாக பெருந்துறை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்தேன். இந்த வழக்கில் புகார்தாரரான சின்னபழனியப்பன் மகன் துரைசாமி என்பவர் பெருந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 01.08.2017 ம் தேதியில் இருந்து 31.12.2017 ம் தேதி வரை எந்தவித வரவு செலவு பண பரிவர்த்தனையும் செய்யவில்லை. அதற்கான பதிவுகள் கொண்ட ஏல பதிவேடு **(தொகுதி 8 முதல் 13 வரை)** ரெஜிஸ்டர்கள் மொத்தம் ஆறு ரெஜிஸ்டர்கள் உள்ளது. அவைகளின் சான்றிட்ட நகல்களை தற்போது நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். இந்த **(01.08.2017 ம் தேதியில் இருந்து 31.12.2017 ம் தேதி வரையிலான ஏலப் பதிவேடுகளின் சான்றிட்ட நகல்கள் (தொகுதி 8 முதல் 13 வரை) எ.சா.ஆ.1 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.)** இந்த ஆறு ரெஜிஸ்டர்களையும் நான் முழுவதுமாக பரிசோதனை செய்து பார்த்ததின் அடிப்படையில்தான் புகார்தாரர் துரைசாமி இந்த கால கட்டத்தில் பெருந்துறை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் எவ்வித பண பரிவர்த்தனையும் செய்யவில்லை என கூறுகிறேன்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**
**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை